கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
வடக்கு மாகாண சபை
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව
උතුරු පළාත් සභාව
Department of Co-operative Development
Northern Provincial Council
முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்
වැඩිහිටියන් නිවාස සංකීර්ණය, නුවර පාර, කයිතඩි, යාපනය
Elders' Home Complex., Kandy Road, Kaithady,Jaffna

My No:- NP/15/04/02/CCD/CI Date:-2023.06.26

சுற்றறிக்கை இல – 2023/04

சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களுக்கும்,

**கூட்டுறவு நிதி அறவீடும் பயன்பாடும்**

கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கூட்டுறவு நிதி அறவீடானது ஸ்தம்பிதநிலை அடைந்துள்ளதனையும் இதனால் பெருந்தொகையான பணம் நிலுவையாக இருந்து வருவதனையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அத்துடன் தற்போது கூட்டுறவு நிதியிலிருந்து நிதிப்பெறுகைகளுக்காக கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் அதிகரித்தவண்ணமுள்ளன. இந்நிலையில் கூட்டுறவு நிதி அறவீட்டினை வினைத்திறனாக மேற்கொள்ள வேண்டிய தேவையும் அந்நிதியை கூட்டுறவு அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

**1. கூட்டுறவு நிதி அறவீடு**

வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வின் போது ஒதுக்கம் செய்யப்படும் கூட்டுறவு நிதியானது பின்வரும் அடிப்படையிலான கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக அறவீடு செய்யப்படல் வேண்டும்.

| தொ. இல | கூட்டுறவுச் சங்கத்தின் பெயர் | அறவீடு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் |
|---|---|---|
| 01 | மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் | மாவட்டத்தில் உள்ள அனைத்து சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள் |
| 02 | மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் | மாவட்டத்தில் உள்ள அனைத்து பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் |
| 03 | மாவட்ட கூட்டுறவுச் சபை | பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த மாவட்டத்திலுள்ள ஏனைய அனைத்து கூட்டுறவுச் சங்கங்கள் |

எனவே சகல கூட்டுறவுச் சங்கங்களும் இந்நிதி அறவீட்டினை மேற்கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட மேற்படி கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமது ஒத்துழைப்பினை வழங்குதல் வேண்டும்.

**2. கூட்டுறவு நிதி பயன்படுத்துகை**

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின் பிரகாரம் சங்கங்களின் கணக்காய்வின் போது ஒதுக்கப்படும் கூட்டுறவு நிதி மாகாண பதிவாளரின் கூட்டுறவு நிதிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டு அந்நிதியானது சட்ட ஏற்பாடுகளின் கீழ், பின்வரும் நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படலாம்.

01. கூட்டுறவு கல்வி, விசாலிப்பும் பிரசித்தப்படுத்தலும்
02. கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைத்திறனை விருத்தி செய்தல்
03. இயங்குகின்ற கூட்டுறவுச்சங்கங்களுக்கு உதவியளித்தல்

ஆணையாளர் / කොමසාරිස / Commissioner – 021 205 7063
கணக்காளர் / ගණකාධිකාරී / Accountant – 021 223 2212
தொலைநகல் / ෆැක්ස් / fax – 021 205 7062
பொது / පොදු / Gen – 021 205 7064
E- mail: - ccdnp@mail.com

3. அறவீடுகள்

3.1 இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள கூட்டுறவு நிதியினை ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டினை அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுச் சபையிடமிருந்து அல்லது சமாசங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

3.2 பெருந்தொகையான பணம் நிலுவையிலுள்ள சங்கங்களைத் தவிர ஏனைய சங்கங்கள் ஒரே தடவையில் அவற்றை செலுத்தி முடித்தல் வேண்டும்.

3.3 பெருந்தொகையாக கூட்டுறவு நிதி நிலுவையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அந்நிதியினை செலுத்துவதற்கான திட்டமொன்றினை வகுத்து இயக்குனர் சபையின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இயக்குனர் சபையின் ஒப்புதல் பெற்ற திட்டத்தினை உரிய பகுதி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரூடாக பதிவாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டுமென்பதுடன் அத்திட்டத்திற்கமைய கூட்டுறவு நிதியினை பதிவாளருக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தலும் வேண்டும்.

3.4 இவ்வாறு அறவிடப்படும் நிதிகள் யாவும் மக்கள் வங்கியில் இதற்கென திறக்கப்பட்ட தனியான சேமிப்பு கணக்கு ஒன்றில் உடனுக்குடன் வைப்பிலிடவேண்டும்.

3.5 காசோலைகள் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுச் சபையின் அல்லது சமாசங்களின் பெயரிலேயே வழங்கப்படலாம்.

4. கணக்கு வைத்தல்

4.1 கூட்டுறவு நிதி அறவீடுகள் தொடர்பாக ஒவ்வொரு சங்கத்தின் பெயரிலும் தனித்தனி கணக்குகள் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுச் சபை அல்லது சமாசத்தினால் பேணப்படும்.

4.2 ஒவ்வொரு மாதமும் அறவிடப்படும் கூட்டுறவு நிதியானது அதற்கு அடுத்த மாதம் 05ஆம் திகதிக்கு முன்னதாக பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

4.3 கொடுப்பனவுகள் யாவும் காசோலை மூலமே வழங்கப்படல் வேண்டும்.

4.4 இவ்வேலைகளை செயற்படுத்த ஏற்படும் செலவை ஈடுசெய்யும் பொருட்டு அறவிடப்படும் மொத்த நிதியில் 3% அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுச்சபைக்கு அல்லது சமாசத்திற்கு தரகு பணமாக வழங்கப்படும்.

4.5 மக்கள் வங்கியில் பேணப்படும் மேற்படி சேமிப்பு கணக்கிற்கு வருடாந்தம் பெறப்படும் வட்டித்தொகையும் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

5. நிதிப்பயன்பாடு

5.1 கூட்டுறவுச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பதிவாளரால் அனுமதிக்கப்படும் நோக்கங்களுக்கு மட்டுமே இந்நிதி வழங்கப்படும்.

5.2 கிடைக்கப்பெறும் நிதிக் கோரிக்கை விண்ணப்பங்கள், கூட்டுறவு நிதிக்கென கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தில் நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனைக்குழுவின் பரிந்துரையுடன் பதிவாளரால் விடுவிப்புச் செய்யப்படும்.

6. கூட்டுறவு நிதிக்கடன்கள் முற்பணங்கள் அறவீடு

6.1 நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் மாதாந்தம் கடன் முதல் தொகை மற்றும் வட்டியானது கடனைப்பெற்றுக்கொண்ட கூட்டுறவுச் சங்கங்களால் ஒழுங்குமுறையாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6.2 மாறாக தவணைப்பணம் ஒழுங்குமுறையாக செலுத்தப்படாதுவிடில் செலுத்தப்படாத ஒவ்வொரு தவணைக்கும் தாமதக்கட்டணம், மீதிக் கடன் தொகைக்கு அறவீடு செய்யப்படும்.

7. அறிக்கையிடல்

7.1 கூட்டுறவு நிதியை அறவீடு செய்ய அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தான அறவீடுகள் மற்றும் பதிவாளருக்குரிய செலுத்துகைகள் தொடர்பான மாதாந்த அறிக்கைகள் உதவி ஆணையாளர் ஊடாக அடுத்து வரும் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் கிடைக்ககூடியதாக பதிவாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

மேற்படி விடயம் தொடர்பாக திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 1998/03, 2003/05, 2003/09, 2003/10, 2003/11 இலக்க கூட்டுறவு நிதி அறவீடும் பயன்பாடும் என்னும் சுற்றறிக்கைகள் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றது.

இச்சுற்றறிக்கையானது 01.07.2023இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வெளியிடப்படுகின்றது.

**தேவந்தினி பாபு,**
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்,
வடக்கு மாகாண சபை.

தேவந்தினி பாபு
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்
வடக்கு மாகாண சபை

பிரதிகள் -

1. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், ......................... – செயற்படுத்துவதற்காக
2. பணிப்பாளர், மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம், வவுனியா, ...................... - தகவலுக்காக